## தேர்ச்சி: ஒன்று :- இறைவன் மட்டில் நிறை விசுவாச வாழ்வு வாழ்வர்

8

# 1.8. மூவொரு இறைவனின் அன்பு



1. இப்படத்தைப் பற்றி உமது கருத்து என்ன?
2. இக்குடும்பத்தில் ஒவ்வொரு வரிடத்திலும் வெளிப்படும் பண்புகள் எவை?
3. இக்குடும்பத்தில் எத்தகைய அன்பு வெளிப்படுத்தப்படுகிறது?

### உமக்குத் தெரியுமா?

**நல்லதொரு குடும்பத்தில்,**

தந்தை, தாய், பிள்ளை ஆகியோர் ஒருவர் ஒருவருக்குச் செலுத்தும் அன்பின் மூலம் இவ்வுலகில் மூவொரு இறைவனின் அன்பு வெளிப்படுத்தப்படுகிறது.

* மூவொரு இறைவன் என யாரை அழைக்கிறோம்.?
* மூவொரு இறைவனை அறிந்து கொள்வோம்.

ஒரே இறைவன் மூன்று ஆட்களாக உள்ளார் என்பதை நீர் அறிந்திருக்கிறீர். இது எவ்வாறு முடியும்? இது ஒரு மறைபொருள். தந்தையினுள் மகனும், மகனில் தந்தையும் இருக்கிறார்கள் என கிறிஸ்து பின்வருமாறு வெளிப்படுத்தியுள்ளார்.

**நான் தந்தையுள் இருக்கிறேன்; தந்தை என்னுள் இருக்கிறார். நான் சொல்வதை நம்புங்கள்; என் வார்த்தையின் பொருட்டு நம்பாவிட்டால் என் செயல்களின் பொருட்டாவது நம்புங்கள். (யோவா. 14:10-11)**

கிறிஸ்து இறைமகன் என்பது அவரது சொல்லால் மட்டுமல்ல, செயல்களாலும் வெளிப்படுத்தப்படுகிறது.

- நோயாளரைக் குணப்படுத்தல்
- புயலை அடக்குதல்
- இறந்தோரை உயிர்ப்பித்தல்
- பேய்களை விரட்டுதல் போன்றவையே அச்செயல்களாகும்.

அவரை விசுவசிப்பதற்கு எம்மை இறைமகன் கிறிஸ்துவே அழைக்கின்றார். கிறிஸ்துவைப் போலவே திருமுழுக்கின்போது நாம் பெற்றுக்கொண்ட தூய ஆவியானவர் எம்முள் செயலாற்றுவதனால் எமக்குப் பல வரங்கள் கிடைக்கின்றன. இவ்வரங்களோடு தூய ஆவியானவர் எமக்கு மூன்று இறை சார்ந்த புண்ணியங்களை அளிக்கின்றார். அவை,

- நம்பிக்கை
- எதிர்நோக்கு
- அன்பு **(1 கொரி 13:13)**

இவை வழியாக இறைவனோடு நேரடியாகத் தொடர்புகொள்ள முடியும். இவை இறை புண்ணியங்கள் என அழைக்கப்படுகின்றன.

இறை அன்பின் பொருட்டு கிறிஸ்து இவ்வுலகிற்கு வந்தார் எனவும், அவ் அன்பின் அடிப்படையில் இறை கட்டளையைக் கடைப்பிடித்து அன்பில் நிலைத்திருக்க வேண்டும் எனவும், இதனால் நாம் அவரது அன்பில் பங்குபெறுகிறோம் எனவும் அவர் வெளிப்படுத்தினார்.

மேலும், நாம் நம்மை அன்பு செய்வது போலவே நம் அயலவரையும் அன்பு செய்ய வேண்டும் எனவும், எத்தகைய பிளவுகள் மத்தியிலும் எம் சகோதரரை அன்பு செய்ய வேண்டும் எனவும் கிறிஸ்து தம் வாழ்வின் மூலம் எமக்கு வெளிப்படுத்தியுள்ளார்.

**என் தந்தை என்மீது அன்பு கொண்டுள்ளது போல நானும் உங்கள்மீது அன்பு கொண்டுள்ளேன். என் அன்பில் நிலைத்திருங்கள். நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பது போல நீங்களும் என் கட்டளைகளைக் கடைப்பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள்.**

**(யோவா. 15:9–10)**

இதன்படி நாம் இறைகட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமே நாம் கிறிஸ்துவை அன்பு செய்கிறோம் என வெளிப்படுத்துகிறோம். அதுவே, அன்பின் வாழ்வாகும். அன்பு என்பது மிக உயர்ந்த புண்ணியமாகும். இப்புண்ணியத்தின் மூலம் மூவொரு இறைவன் மட்டில் எமக்கு நம்பிக்கை, எதிர்நோக்கு ஏற்படுகிறது.

எமக்காகத் தம் உயிரை அளிக்கும் அளவிற்கு எம்மை அன்பு செய்த கிறிஸ்துவை விசுவசிக்கும் நாம் எமது மீட்புக்காக அவரை நம்பிக்கையுடன் எதிர்நோக்க வேண்டுமெனத் திருச்சபை எமக்குக் கற்பிக்கின்றது.

- பின்வரும் பாடலைப் பாடவும்.
- அதில் உள்ள கருத்துக்களைப்பற்றி சிந்திக்கவும்.

## அன்பும் நட்பும் எங்குள்ளதோ

அன்பும் நட்பும் எங்குள்ளதோ
அங்கே இறைவன் இருக்கின்றார்

1. கிறிஸ்துவின் அன்பு நம்மையெல்லாம்
ஒன்றாய்க் கூட்டிச் சேர்த்ததுவே
அவரில் அக்களித்திடுவோம் யாம்
அவரில் மகிழ்ச்சி கொள்வோமே

2. சீவிய தேவனுக்கஞ்சிடுவோம்
அவருக்கன்பு செய்திடுவோம்
நேரிய உள்ளத்துடனே யாம்
ஒருவரையொருவர் நேசிப்போம்

3. எனவே ஒன்றாய் நாமெல்லாம்
வந்து கூடும் போதினிலே
மனதில் வேற்றுமை கொள்ளாமல்
விழிப்பாய் இருந்து கொள்வோமே

## இவற்றை உம்மால் செய்ய முடியுமா?

- உமது வகுப்பறையில் உணவு கொண்டு வராத சக மாணவருடன் உமது உணவைப் பகிர்ந்து கொள்ளல்.
- உமது சகோதரருடன் உமது வீட்டுக் கடமைகளைப் பகிர்ந்து செய்து பெற்றோருக்கு உதவுதல்.
- உமது வகுப்பறையைச் சுத்தம் செய்வதற்கு உதவுதல்.

## விடை எழுதுக.

1. மூவொரு இறைவனின் மூன்று ஆட்களையும் பெயரிடுக.
2. கிறிஸ்து இறைமகன் என வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் இரண்டு எழுதுக.
3. கிறிஸ்துவின் இறைமாட்சி வெளிப்படுத்தப்பட்ட செயல்கள் இரண்டு குறிப்பிடுக.
4. நாம் கற்க வேண்டிய மூன்று முக்கிய இறைசார் புண்ணியங்களைப் பெயரிடுக.
5. நீர் அன்பில் நிலைத்திருக்கிறீர் என்பதை வெளிப்படுத்தும் முக்கிய செயல்கள் எவை?.
6. உமது அயலவருக்கு நீர் உதவி செய்யக்கூடிய நான்கு முறைகளைப் பெயரிடுக.

### உமது வாழ்விற்கு...

தினமும் இச்செபத்தைச் சொல்லவும்.

பிதாவுக்கும், சுதனுக்கும், தூய ஆவிக்கும் மகிமை உண்டாவதாக.